# ஜான் போர்டிரியரின் சிந்தனையில் ஊடக மெய்மையும் அந்நியமாதல் செயல்முறையும் - ஒரு மெய்யியல் பார்வை

# Hyperreality and Process of Alienation in the Jean Baudrillard's thoughts – A Philosophical Perspective

இரத்தினசபாபதி பிரேம்குமார்[1]

## ஆய்வுச் சுருக்கம்

தற்கால பின்நவீன சமூகத்தில் ஊடகங்கள் மக்கள் மீது ஏற்படுத்தும் தாக்கங்களை மதிப்பீடு செய்வதாக ஜான் போர்டிரியரின் சிந்தனைகள் காணப்படுகின்றன. மாக்ஸிசம், கட்டமைப்பு வாதம், பிறகட்டமைப்பு வாதம் மற்றும் மொழியியல் போன்ற பல்வேறு அறிவுத்துறைகளின் செல்வாக்குக்கு உட்பட்ட போர்டிரியர், ஊடக மெய்மை எவ்வாறு மக்களை அந்நியமாதல் செயல்முறைக்கு உட்படுத்துகின்றது? என்பதை பல்வேறு பரிமாணங்களிலிருந்து எடுத்துக் காட்டுகிறார். ஊடகங்கள் (குறிப்பாக இலத்திரனியல் ஊடகங்கள்) மெய்மையினை மறைப்பதாகவும் கற்பனை சார்ந்த மெய்மையினை உருவாக்குவதாகவும் குற்றம் சாட்டும் போர்டிரியர், நுகர்வுச் சமூகத்தில் ஊடகங்கள் வரையறையற்ற செல்வாக்கினை மக்கள் மத்தியில் கொண்டிருப்பதாகவும் மக்களை ஒரு வகை மாயை உலகத்தில் சஞ்சரிப்பவர்களாகவும் மாற்றுகின்றது என்றும் குறிப்பிடுகின்றார். இலத்திரனியல் ஊடகங்கள் உருவாக்கும் ஊடக மெய்மை விம்பங்களையும் குறியீடுகளையும் பொருட்களாக நுகரச் செய்யும் ஒரு உலகத்தினை உருவாக்கியிருப்பதாக வாதிடும் போர்டிரியர் இந்த ஊடக மெய்மை மக்களை மனிதத்துவத்திலிருந்து தீவிரமாக அந்நியப்படுத்தி வருகிறது என்ற கருத்தினை பல்வேறு ஆதாரங்களுடன் நிரூபிக்க முயல்கின்றார். ஊடக மெய்மை மக்களை அந்நியப்படுத்துகின்றது என்ற போர்டிரியரின் வாதத்தை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது. மெய்யியலுக்கேயுரிய ஆய்வுமுறைகளான நம்பிக்கைகள் பற்றிய விமர்சன ரீதியான மதிப்பீட்டு முறை,எண்ணக்கருக்களின் தெளிவுபடுத்துகை முறை , பகுப்பாய்வு முறை, தொகுப்பு முறை, ஒப்பீட்டு முறை, விமர்சன மற்றும் முழுமை முறை என்பன இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் மனிதர்களின் உள ரீதியான பண்புகளை அடிப்படையாகக் கொண்டு ஊடக மெய்மை மற்றும் அந்நியமாதல் தொடர்பான மதிப்பீடு இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

[1]கலாநிதி இரத்தினசபாபதி பிரேம்குமார், தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. மின்னஞ்சல்:. *premkumarr@esn.ac.lk*

**முதன்மைச் சொற்கள்**: மெய்மை, ஊடக மெய்மை, அந்நியமாதல், நுகர்வுச் சமூகம், நகல், இலத்திரனியல் ஊடகங்கள்

## 1.0 அறிமுகம் (Introduction)

ஊடகம் தொடர்பாக முக்கியத்துவம் பெறும் பின் நவீனத்துவ சிந்தனையாளராக ஜான் போர்டிரியர் (துநயெ டீயரனசடைடயசன 1929 - 2007) காணப்படுகிறார். மாக்ஸிசம், கட்டமைப்பவாதம் பின் கட்டமைப்பு வாதம் மொழியியல் என்ற பல்வேறு சிந்தனை முறைகளின் கூட்டுக்கலவையாக ஊடகம் தொடர்பாக முக்கியத்தவம் பெறும் பின் நவீனத்துவ சிந்தனையாளராக ஜான் போர்டிரியரின் மெய்யியல் சிந்தனை காணப்படுகிறது. பிளேட்டோவின் மெய்மை நோக்கிய தேடல் வரிசையில் ஊடகம் தொடர்பாக முக்கியத்துவம் பெறும் பின் நவீனத்துவ சிந்தனையாளராக ஜான் போர்டிரியர் காணப்படுகின்றார். மெய்மை பற்றிய தேடலில் அவர் ஊடக மெய்மை (ாலிநசசநயடவைல) என்ற எண்ணக்கருவை எமக்கு அறிமுகப்படுத்துகிறார். பின் நவீன சமூகத்தில் இலத்திரனியல் ஊடகங்கள் உருவாக்கியிருக்கும் ஒரு மெய்மையாக இந்த ஊடக மெய்மை காணப்படுகிறது. தொலைக்காட்சி, திரைப்படங்கள், இணையதள வலைத்தளங்கள், நவீன வசதியுள்ள அலைபேசிகள், இன்னும் பல. போன்ற சாதனங்களின் ஊடாக முன்னர் ஒருபோதும் இல்லாத புதிய கருத்து நிலை உலகளாவிய ரீதியில் உருவாக்கப்பட்டு வருகிறது. இதனையே போர்டிரியர் ஊடக மெய்மை என அழைக்கிறார். இது தற்கால சந்தை சமூகத்தில் மக்களின் சிந்தனை முறை மற்றும் வாழ்க்கை முறை என்பவற்றை தீர்மானிக்கும் மாபெரும் சக்தியாக இருப்பதாக அவர் வாதிடுகின்றார்.

ஒரு காலத்தில் ‘மெய்மை’(reality) என்பது ஏகத்துவம், தனித்தன்மை மற்றும் உயர்ந்த நிலை என்ற பண்புகளின் இருப்பிடமாக இருந்ததை சுட்டிக்காட்டும் போர்டிரியர்இ நாம் வாழும் தற்கால சந்தை சமூகத்தில் மெய்மை மேற்குறிப்பிட்ட பண்புகளுக்கு முரணாக இருப்பதை சுட்டிக்காட்டுகிறார். இவரின் கருத்துப்படி அசலும்(ழசபைையெட) நகலும்(உழில) இல்லாத ஒரு புதிய வகை மெய்மையாக ஊடக மெய்மை காணப்படுகின்றது. இதனை ‘ளைஅரடயஉசரஅ’ மற்றும் ‘ாலிநசசநயடவைல’ போன்ற சொற்களால் போர்டிரியர் அழைக்கின்றார். இந்த மெய்மையானது விம்பங்கள் மற்றும் குறியீடுகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. இத்தகைய புதிய வகை மெய்மையானது மனிதனை அதிதீவிர அந்நியமாதல் செயல்முறைக்கு உட்படுத்துகின்றது என போர்டிரியர் வாதிடுகின்றார். இவ்வாய்வுக் கட்டுரை இவரது இந்த வாதத்தினை மதிப்பீடு செய்ய முயற்சிக்கின்றது.

## 2.0 ஆய்வின் மூலங்களும் முறைகளும் (Materials & Methods)

மெய்யியல் ஆய்வுகள் ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகள், கோட்பாடுகள், கருத்துக்கள் போன்றவற்றை மீள் பரிசீலனை செய்யும் ஆய்வுகளாக காணப்படுவதன் காரணமாக மேற்குறிப்பிட்ட தலைப்பு தொடர்பான மூலநூல்கள், இரண்டாம் தர

நூல்கள் மற்றும் ஆய்வுக்கட்டுரைகள் இவ் ஆராய்ச்சி கட்டுரையினை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆய்வு முறை என்றவகையில் மெய்யியலுக்கேயுரிய ஆய்வுமுறையான நம்பிக்கைகள் பற்றிய விமர்சன ரீதியான மதிப்பீட்டு முறை மற்றும் எண்ணக்கருக்களின் தெளிவுபடுத்துகை முறை என்பனவும் பகுப்பாய்வு முறை, தொகுப்பு முறை, ஒப்பீட்டு முறை, விமர்சன மற்றும் முழுமை முறை என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 3.0 வாதங்களும் பகுப்பாய்வும் (Results & Discussion)

### 3.1.அந்நியமாதல் (alienation) செயல்முறை என்றால் என்ன?

அந்நியமாதல் செயல்முறை என்பது ஏதோ ஒன்று தனது நிலையிலிருந்து விலகியிருப்பதைக் குறிக்கிறது. மாக்ஸின் கருத்துப்படி அந்நியமாதல் ஒரு மனிதன் மனிதப் பண்புகளிலிருந்து விலகியிருக்கும் நிலையினைக் குறிக்கிறது. மாக்ஸ் இந்த எண்ணக்கருவினை லூட்விக் பாயர்பாக்(டுரனறபை குநரநசடியஉா)இடமிருந்து இருந்து பெற்றிருந்தார். லூட்விக் பாயர்பாக் கிறிஸ்தவத்தின் சாரம் (வுாந நுளளநஉந ழக ஊாசளைவயைெைல) என்ற நூலில் சமயம் அல்லது கடவுள் என்ற எண்ணக்கரு எவ்வாறு மனிதனை மனிதத்துவத்திலிருந்து அந்நியமாக்குகின்றது என்று விளக்கியிருந்தார். இக் கருத்தினை மாக்ஸ் தான் வாழ்ந்த நவீன சமூகத்தின் செயல்முறைக்கு பயன்படுத்தியிருந்தார். முதலாளி வர்க்கமும், தொழிலாளி வர்க்கமும் எவ்வாறு தாம் மனிதர்கள் என்ற நிலையிலிருந்து அந்நியப்படுகின்றனர் என்பதையும் ஒரு முதலாளித்துவ சமூகத்தில் இடம்பெறக்கூடிய பல்வேறு விதமான அந்நியமாதல் செயல்முறையினை மாக்ஸ் விளக்கியிருந்தார்.மாக்ஸின் கருத்துப்படி தொழிலாளியும், முதலாளியும் பல்வேறு பரிமாணங்களில் அந்நியமாதல் செயன்முறைக்கு உட்படுகின்றனர். முதலாளி, தொழிலாளியினை ஒரு மனிதனாக நடத்தாமல் உணர்வுகள் மற்றும் உயிரற்ற பண்டமாகக் கருதி நடத்துவதன் மூலமாக தொழிலாளியும், முதலாளியும் மனிதத்தன்மையிலிருந்து அந்நியமாக்கப்படுகின்றனர். முதலாளி அந்நியமாதல் செயன்முறைக்கு காரணமாகும் அதேவேளை தொழிலாளி அந்நியமாதல் செயல்முறைக்கு உட்படுத்தப்படுகின்றார். முதலாளியின் அதிக இலாப நோக்கம் கருதிய செயற்பாடுகள் காரணமாக தனது முதலாளியினை எதிரியாகக் கருதி செயற்படும் அவலம் நவீன முதலாளித்துவ சமூகத்தில் காணப்பட்டதை மாக்ஸ் விளக்கியிருந்தார்.

### 3.2. ஊடக மெய்மையும் அந்நியமாதலும்

மாக்ஸிசவாதி, சமூகவியலாளன், மெய்யியலாளர் மற்றும் கலாசார கோட்பாட்டாளர் என்ற பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட போர்டிரியர் ஊடக மெய்மை எவ்வாறு அந்நியமாதல் செயல்முறையினை அதிகரிக்கின்றது என்பதையும் எடுத்துக்காட்ட முயல்கின்றார். நவீன சமூகத்தில் முதலாளி- தொழிலாளி என்ற வர்க்க வேறுபாடுகள் மற்றும் தொழிலாளி மீதான சுரண்டல் தெளிவானதாக இருந்தது ஆனால் பின்நவீன சமூகத்தில் முதலாளி தொழிலாளி

என்ற வேறுபாடும் சுரண்டல் செயல்முறையும் தெளிவற்றவையாக உள்ளன என போர்டிரியர் சுட்டிக்காட்டுகின்றார். பின்நவீனத்துவ சமூகத்தின் சுரண்டல்கள் நுட்பமானதாகவும் சிக்கலானதாகவும் இருக்கின்றது என அடோர்னோ குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது. போர்டிரியர் தனது ஊடக மெய்மையை விளக்கும் போது மாக்ஸில் இருந்தே ஆரம்பிக்கின்றார். மாக்ஸ் தனது அந்நியமாதல் செயல்முறையினை உற்பத்தி செயன்முறையினை கொண்டு விளக்கினார். ஆனால் போர்டிரியார் அந்நியமாதல் செயன்முறையினை நுகர்வினை கொண்டு விளக்குகிறார். பின்நவீன சமூகத்தில் நுகர்வுக்கு அடிப்படையாக இருக்கும் ஊடகம் ஒருவித மெய்மையினை உருவாக்குவதாகவும் அது அந்நியமாதல் சூழ்நிலையினை உருவாக்குவதாகவும் கருதுகின்றார். அதாவது ஊடகத்தினால் உருவாக்கப்படும் மெய்மை என்பது ஒரு மூலத்தினையோ அல்லது அடிப்படைப் பொருளையோ குறிப்பதாக இருக்காது என்பதுடன் நாம் வேறு எதிர்பார்ப்பு அல்லது ஒரு வகை கற்பனையிலேயே ஊடக மெய்மையினை நுகர்கின்றோம் இந்த மெய்மைக்குரிய ஆதாரம் புறஉலகில் இல்லை என்று குறிப்பிடும் போர்டிரியர் ஊடக மெய்மை அதற்குரிய பிரதேசத்தினையோ குறிக்கப்படும் பொருளையோ அல்லது விடயத்தினையோ கொண்டிருக்கவில்லை என்றும்(போர்டிரியர்1994:1) “நாம் கற்பனைச் சார்ந்த நிலையில் மெய்மையினை நுகர்கின்றோம்” (போர்டிரியர்1998:33) என்றும் குறிப்பிடுகின்றார்.

இந்த ஊடக மெய்மை என்பது ஒரு வகை பௌதீக அதீத தன்மை சார்ந்த இருப்பு நிலையினையே பிரதிபலிக்கின்றது ஏனெனில் ஊடகமெய்மையினால் குறிக்கப்படும் விடயங்கள், பொருள்கள் மற்றும் நிகழ்வுகள் அது குறிப்பிடும் வகையில் யதார்த்த உலகில் காணப்பட மாட்டாது. மாக்ஸ் அந்நியமாதல் செயல்முறையினை உற்பத்தியினை அடிப்படையாக கொண்டு விளக்க, போர்டிரியர் அதனை ஊடகங்கள் செல்வாக்கு செலுத்தும் இலத்திரனியல் உலகில் நுகர்வினை அடிப்படையாகக் கொண்டு விளக்குகிறார். போர்டிரியர் ஒரு மொழியியலாளராகவும் மாக்ஸிச வாதியாகவும் ஊடக உண்மைக்கும் அந்நியமாதல் செயன்முறைக்கும் இடையில் உள்ள தொடர்பினை பின்வருமாறு எடுத்துக்காட்டுகிறார். ஒரு மொழியில் காணப்படும் வார்த்தை கட்டமைப்புக்கள் பொதுவாக புற உலகில் உள்ள விடயங்களை குறிப்பதாக இருக்கும். பண்டைய மற்றும் பாரம்பரிய மெய்யிலாளர்கள் அவர்கள் வாழ்ந்த காலத்தில் ஒரு வார்த்தைக்கும் அது குறிப்பிடும் பொருளுக்குமிடையே நிலவிய உறவு கட்டாயமானதாக காணப்பட்டதுடன் சிக்கலற்றதாகவும் இருந்தது என்று கூறும் போர்டிரியர், நாம் வாழும் இலத்திரனியல் உலகில் சொல்லுக்கும் அதன் பொருளுக்கும் இடையிலான தொடர்பு மிகவும் சிக்கல் நிறைந்ததாக இருக்கின்றது என்று குறிப்பிடுகின்றார்.

தொழில் முனைவோரும் பல்தேசிய கம்பனிகளும் போட்டியுடன் இலத்திரனியலை மையமாக கொண்ட பின்நவீன உலகினை ஆண்டு வருகின்றன. ஒரு பொருள் அல்லது நிகழ்வு பற்றிய கருத்துக்களை மக்களின் நுகர்வினை அடிப்படையாகக் கொண்டு நோக்குவதற்கு தொழில் முனைவோர் செயற்பாடுகளை செய்கின்றனர். பின்நவீனத்துவ சமூகத்தில் மறைமுகமாகவும் தெளிவற்றதாகவும் சுரண்டல் காணப்படுவதுடன் அனைத்து விடயங்களும் நுகர்வினை அடிப்படையாகக் கொண்டே எடுத்துரைக்கப்படுகின்றன என போர்டிரியர் குறிப்பிடுகின்றார். வாழ்க்கை பற்றிய எமது மதிப்பீடுகளை இலத்திரனியல் ஊடக செயற்பாடுகள் மூலம் தொழில் முனைவோரும் பல்தேசிய கம்பனிகளும் தீர்மானிக்கின்றனர். நியாயமாக தோன்றும் உண்மைகள் மாற்றப்பட்டு போலியான பொய்களும் மெய்மைகளும் உண்மைகளாக

சித்திரிக்கப்படுகின்றன. இச்செயல்முறைக்கு இலத்திரனியல் ஊடகங்கள் அதிகளவு பங்களிப்பைச் செய்கின்றன.

பின்நவீன உலகில் தொழில்முனைவோர் மற்றும் பல்தேசியக் கம்பனிகளின் இலாபநோக்கம் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. ஊடக மெய்மை விம்பங்களையும் குறியீடுகளையும் கொண்டிருப்பதாகக் கருதும் போர்டிரியர், ஊடக மெய்மை குறிக்கும் கருத்துக்கள் மற்றும் பொருட்கள் புறத்தே அப்படியே இருக்காது எனக் குறிப்பிடுகிறார். அது ஊடகங்களினால் உருவாக்கப்படும் மெய்மையே தவிர உண்மையான மெய்மை இல்லை. நுகர்வினை அடிப்படையாகக் கொண்ட பின்நவீன சமூகத்தில் செயற்படுகின்ற ஊடகங்கள் கடவுளாகவோ அல்லது பேயாகவோ பல்வேறு விடயங்களில் மனிதர்களைக் கவர்ந்து கட்டுப்படுத்துகிறது.

### 3.3. மதிப்பீடுகளும் பின் நவீனத்துவ சமூகமும்

மாக்ஸ் நவீன சமூகத்தில் இரு விதமான மதிப்பீடுகள் பற்றிக் குறிப்பிடுகின்றார். (1) பயன்பாட்டு மதிப்பீடு (ரளந எயடரந) அதாவது ஒரு பொருளை பயன்படுத்துவதால் ஏற்படும் மதப்பீடு. (2) பரிமாற்ற மதிப்பீடு (நஒஉாயபெந எயடரந) அதாவது ஒரு பொருளுக்கு பதிலாக இன்னொரு பொருளை பரிமாற்ற முடியுமானால் அந்தப் பொருள் பரிமாற்ற மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்ளும். எடுத்துக்காட்டாக நீரை நாம் குடிப்பதற்கு பயன்படுத்தும் போது அது பயன்பாட்டு மதிப்பீட்டைப் பெறுகிறது. அதேவேளை ஐந்து லீற்றர் நீரை ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்க்கு சமமாக பரிமாற்றம் செய்ய முடியுமானால் நீர் பரிமாற்ற மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்கிறது. மேற்குறிப்பிட்ட இரண்டு மதிப்பீடுகளுமே மாக்ஸினால் விளக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக இரண்டு மதிப்பீடுகள் பற்றி போர்டிரியர் பேசுகின்றார். குறியீட்டு மதிப்பீடு (ளலஅடிழடைஉ எயடரந), ஒரு பொருள் அல்லது விடயம் அந்தப் பொருளைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படாமல் இன்னொரு பொருள் அல்லது விடயத்தைக் குறிக்க பயன்படுத்தப்படல். எடுத்துக்காட்டாக வெள்ளைப்புறா என்பதை ஒரு பறவையாகப் பார்க்காமல் அதனை அமைதியைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. மேற்குறிப்பிட்ட மதிப்பீடுகளுக்கு மேலதிகமாக போர்டிரியர் அந்தஸ்து மதிப்பீடு (ளபைெ எயடரந) என்ற ஒன்றையும் குறிப்பிடுகின்றார். போர்டிரியரைப் பொறுத்த வரையில் அதிகம் பின்நவீன சமூகத்துடன் தொடர்புபட்டுள்ளதாக அந்தஸ்து மதிப்பீடு காணப்படுகின்றது. இந்த மதிப்பீடு நுகர்வினை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கிறது. பின் நவீன சமூகத்தில் மக்கள் பொருளுக்கு பதிலாக அந்தஸ்து மதிப்பீட்டினையே நுகர்வதாக போர்டிரியர் வாதிடுகின்றார். இந்த அந்தஸ்து மதிப்பீடு நவநாகரீக பாவனை, கௌரவம், அதிகாரம், இன்னும் பல காரணிகளை தன்னிடத்தில் உள்ளடக்கியுள்ளது. மக்கள் தமது உண்மையான தேவைகளை பூர்த்தி செய்வதற்காக நுகர்கின்றனர் என்பதைக் காட்டிலும் தமது அதிகாரம், நவநாகரீக பாவனை, கௌரவம் இன்னும் பல ஆகிய பொருட்களையே நுகர முற்படுகின்றனர் என போர்டிரியர் வாதிடுகின்றார். பின்நவீனத்துவ சமூகத்தில் மனிதத்தேவைகளைப் பூர்த்தி செய்தல் பயன்பாட்டு அடிப்படையில் இடம்பெறாமல் மேற்குறிப்பிட்ட அந்தஸ்து

மதிப்பீட்டின் அடிப்படையிலே இடம்பெறுகிறது. இச்செயல்முறையினை நாம் அந்நியமாதல் செயல்முறையாகக் குறிப்பிடலாம். இத்தகைய அந்நியமாதல் செயன்முறையினை உருவாக்குவதில் இலத்திரனியல் ஊடகங்கள் பெரும் பங்களிப்பைச் செய்து வருகின்றன எனக் குறிப்பிடும் போர்டிரியர், அந்நியமாதல் செயல்முறை என்பது தற்கால சமூகத்தில் அடிப்படைக் கட்டமைப்பாகவே மாறிவிட்டது என வேதனைப்படுகின்றார். பின்நவீன சமூகத்தில் காணப்படும் அந்நியமாதல் செயல்முறையின் மிகவும் மோசமான நிலையினை பின்வருமாறு விபரிக்கிறார்.

> “அந்நியமாதலை இல்லாது செய்வதற்குரிய எல்லா விதமான தீர்வுகளும் முடக்கப்பட்டு விட்டன. அந்நியமாதல் தீர்க்கப்பட முடியாத பிரச்சினையாக மாறிவிட்டது. இது பிசாசுடன் பேரம் பேசுவதைப் போன்றது. இதுவே சந்தை சமூகத்தின் அடிப்படைக் கட்டமைப்பு” (போர்டிரியர்1998:190)

பின்நவீன சமூகத்தில் ஊடக மெய்மையின் செயற்பாடுகள் காரணமாக தனிமனிதனும் சமூகமும் தமது உரிமைகளை இழக்க வேண்டியுள்ளது. மனிதர்களும், மனிதப் பண்புகளும், விழுமியங்களும் பண்டங்களாகக் கருதப்படும் நிலையினை ஊடக மெய்மையும் அதனை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் சந்தைப் பொருளாதாரமும் ஏற்படுத்தியுள்ளன. இதன் காரணமாக தனிமனிதர்கள் தனது சுயாதீனத்தை இழந்து மிகவும் தீவிரமான அந்நியமாதல் செயல்முறைக்கு உள்ளாகியுள்ளார்கள். பிராங்பேர்ட் சமூக ஆய்வு நிறுவன சிந்தனையாளர்களைக் காட்டிலும் அதிதீவிரமான பகுப்பாய்வினை பின்நவீன சமூகம் தொடர்பாக போர்டிரியர் மேற்கொள்கிறார். பின்நவீன சமூகத்தில் நுகர்வானது அதிகம் குறியீடுகள் மற்றும் விம்பங்களுடன் தொடர்புபடுகின்றதே தவிர பொருட்களுடன் தொடர்புபடுவது குறைவாக இருக்கிறது. ஊடக மெய்மை மனித விழுமியங்களையும் மனிதப் பண்புகளையும் கேள்விக்குறியாக்குகின்றது. பாரம்பரிய மதிப்பீடுகளின் மீது பெருமளவு தாக்கத்தினை ஊடக மெய்மை ஏற்படுத்தியுள்ளது. நுகர்வோரின் திருப்தியை அடிப்படையாகக் கொண்ட விளம்பரங்கள் மனிதனை வழிநடத்துகின்றன. குழுவாக இயங்குகின்ற மனிதர்களை தனித்தனியாகப் பிரித்து அவர்களுக்குரிய உலகத்தை ஊடக மெய்யியல் உருவாக்குகின்றது என போர்டிரியர் வாதிடுகின்றார்.

தனிமனிதர்கள் மீது ஊடக மெய்மையின் ஆதிக்கம் என்பது அவர்களின் ஆசைகளையும், கனவுகளையும் நாடி பிடித்துப் பார்த்து அதனை பூர்த்தி செய்வதாகக் காணப்படுகின்றது. ஆனால் உண்மையில் அவர்களது ஆசைகள் பூர்த்தி செய்யப்படுகின்றதா?, அந்த ஆசைகள் சரியானவையா?, அந்த ஆசைகள் சாத்தியமானவையா? போன்ற கேள்விகளுக்குரிய பதிலைத் தர ஊடக மெய்மை தயாராக இல்லை. போர்டிரியர் இன் கருத்துப்படி நுகர்வு என்பது பின்நவீன சமூகத்தில் புதிய பரிமாணங்களைப் பெற்றுள்ளது. நவீன சமூகத்தில் காணப்பட்டது போல பொருள்களை தேவைகளுக்காக நுகர்வு செய்யாமல் அரைவாசி குறியீடுகளையும், விம்பங்களையும் நுகரும் ஒரு செயற்பாடாகக் காணப்படுகின்றது. இலத்திரனியல் ஊடகங்களில் இடம்பெறும் விளம்பரங்கள் நாம் எப்படி நுகர வேண்டும்?, எதனை

நுகர வேண்டும்?, எப்போது நுகர வேண்டும்? ஆகிய விடயங்கள் தொடர்பாக நுகர்வோருக்குரிய வழிகாட்டியாக அமைகின்றன. ஒவ்வொரு தனிநபரையும் கவரக்கூடிய வகையில் மூல உபாயங்களின் உதவியுடன் ஊடகங்கள் செயற்படுகின்றன. இத்தகைய மூல உபாயங்களின் மொத்த உருவமாக விளம்பரங்கள் காணப்படுகின்றன.பாரம்பரிய ஒழுக்கவியல் குழுக்களின் ஒழுக்க விதிகளுடன் தனிநபர்களின் கடப்பாடுகள் இணைந்து செல்ல வேண்டும் என்ற நிலையினை உருவாக்கியிருந்தது. ஆனால் ஊடக மெய்மை தனிநபர்களின் உணர்வுகளுக்கும், ஆசைகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் குழுக்களின் ஒழுக்க விதிகளுக்கும் தனிநபர்களின் உணர்வுகளுக்கும், ஆசைகளுக்குமிடையே முரண்பாட்டினைத் தோற்றுவித்து தீர்வினை அவர்களிடமே விட்டுவிடுகிறது. (போர்டிரியர்1968:13) நவீன சமூகத்தை காட்டிலும் அதிதீவிர அந்நியமாதல் செயல்முறை பின்நவீனத்துவ சமூகத்தில் இடம்பெற்று வருவதாலும் ஒவ்வொரு தனிநபர்களின் விருப்பங்களும் ஆசைகளும் புறவயப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த செயல்முறையில் ஊடக மெய்மை முக்கிய பங்கு வகித்து வருகின்றது. தனி மனித சுதந்திரமும் மனிதத்துவமும் பெருமளவிற்கு ஊடக மெய்மையினால் பாதிப்புக்குள்ளாகின்றன. இவ்வகையில் ஊடக மெய்மையினால் உருவாக்கப்படும் அந்நியமாதல் செயன்முறை மனிதனை அவனது மரணத்திற்கு அழைத்து செல்வதாக போர்டிரியர் வாதிடுகின்றார். இந்த மரணம் ஒன்றில் ஒரு மனிதனுக்கு இருக்க கூடிய தனித்தன்மையின் இழப்பாகவோ அல்லது பௌதீக ரீதியான இழப்பாகவோ இருக்கும் எடுத்துக்காட்டாக, அண்மையில் இணையத்தளங்களில் செயற்பட்டு வந்த நீலத்திமிங்கிலம் நிகழ்ச்சி (டிடரந றாயடந ிசழபசயஅ) பல சிறுவர்களின் உயிர்களுக்கு எமனாக மாறியதை குறிப்பிடலாம்.

மாக்ஸ் கருதியது போல் எவ்வாறு மனிதர்கள் நவீன சமூகத்தில் பண்டங்களாக கருதப்பட்டார்களோ அதே போல் பின்நவீன சமூகத்திலும் பண்டங்களாகவே மாற்றப்பட்டனர் என போர்டிரியர் குற்றம் சாட்டுகிறார். குறியீடுகள், விம்பங்கள் மற்றும் நுகர்வு மாதிரிகள் போன்ற மூல உபாயங்கள் மூலம் இலாபம் நோக்கமாக மாறுகின்றது. இத்தகைய சூழ்நிலையில் பின்நவீன சமூகத்தில் அதிதீவிர அந்நியமாதல் செயல்முறை இடம்பெறுகிறது. குறியீடுகளையும் விம்பங்களையும் பொருட்களாக நினைத்து நுகருகின்ற தன்மை பின்நவீனத்துவ சமூகத்தில் முக்கிய பண்பாக மாறிவிட்டது. ஊடகமும் மக்களின் கலாசார முறைமையும் இத்தகைய சூழ்நிலைக்கு சாதகமாக அமைந்து விடுகின்றது. எடுத்துக்காட்டாக வேதங்களிலும் புராணங்களிலும் கூறப்பட்டுள்ள கதைகள் நவீன தொழில்நுட்ப உதவியுடன் தொலைக்காட்சி தொடர்களாக மக்கள் மத்தியில் அதிக முக்கியத்துவம் பெற்று வருகின்றது. சில வகை பொருட்களுக்கான தொலைக்காட்சி விளம்பரங்கள் பாரம்பரிய சமய கலாசார கூறுகளை தமக்கு உதவியாக பயன்படுத்திக் கொள்வதை காணமுடிகிறது. பண்பாட்டு கூறுகள் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கை பெற்றிருக்கின்றன. இத்தகைய செல்வாக்கினை தொலைக்காட்சி விளம்பரங்கள் பயன்படுத்தி கொள்கின்றன.

ஒரு பொருளை நாம் சுயாதீனமாகவும் சுதந்திரமாகவும் புரிந்து கொள்வதற்கு முன்பாகவே அந்த பொருள் பற்றிய மிகைப்படுத்தப்பட்ட கருத்தினை ஊடகங்கள் மக்களுக்கு வழங்கி விடுகின்றன. இத்தகைய கருத்துக்கள் பொருட்களின் நுகர்விலும் வாழ்க்கையின் மதிப்பீடுகளிலும் பெருமளவிற்கு செல்வாக்கு செலுத்தி வருகின்றன. இதன் காரணமாக ஒரு பொருள் பற்றிய சரியான அறிவினை பெற ஒரு மனிதன் தவறிவிடுகின்றான். ஒரு விடயம் பற்றி ஊடகங்கள் மூலம் உருவாக்கப்படும் கருத்துக்கள் உண்மையான கருத்துக்களாக மாற்றமடைந்து மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஊடகங்கள் பொருட்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றி போலியான கருத்துக்களையும் விம்பங்களையும் உருவாக்குகின்றன இவற்றை மக்கள் உண்மை என்று நம்பி அதன் அடிப்படையில் தமது வாழ்க்கையினை அமைத்துக் கொள்ள முயல்கின்றனர். ஊடகங்களின் இத்தகைய செயன்முறை அந்நியமாதல் செயன்முறையினை இன்னும் தீவிரப்படுத்துகிறது. நிஜஉண்மை புறக்கணிக்கப்ட்டு விம்பங்களினால் உருவாக்கப்படும் உண்மை உண்மையாக ஏற்றுக் கொள்ளப்படுகிற அவலம் பின்நவீன சமூகத்தில் முக்கிய பண்பாக மாறுகிறது.

1990 இல் ‘வளைகுடா யுத்தம் நடக்கவில்லை’ என்ற கட்டுரையினை போர்டிரியர் எழுதினார் வளைகுடா யுத்தம் நேசநாடுகளுக்கும் ஈராக்குக்கும் இடையில் நடைபெற்றது. இக்கட்டுரையின் மூலம் போர்டிரியர் கூறவருவது என்னவெனில் உண்மையில் என்ன நடக்கிறது என்பதை நாம் அறியமுடியாது என்றும் ஊடகங்கள் தரும் செய்தியை மட்டுமே அறியமுடியும் என்பதாகும். ஊடகங்கள் செய்திகளுக்கு பின்னால் பல நோக்கங்கள் இருக்கின்றன என்றும் இத்தகைய நோக்கங்களினால் செய்தியின் நடுநிலைத்தன்மை பாதிக்கப்படுகின்றது என போர்டிரியர் கருதுகின்றார். ஊடக மெய்மையின் செயற்பாடுகள் காரணமாக மனித வாழ்வில் கட்டமைக்கப்பட்டுள்ள இரட்டை மற்றும் முரண் நிலையான எண்ணக்கருக்கள் அனைத்தும் அர்த்தமற்றவையாக மாறிவிட்டதாக போர்டிரியர் சுட்டிக்காட்டுகிறார். அழகுலகில் இருக்கும் அழகு - அழகற்றது, அரசியல் உலகில் இருக்கும் வலதுசாரி - இடதுசாரி, ஊடகத்தில் இருக்கும் உண்மை – பொய், பொருள்கள் உலகில் இருக்கும் பன்படுவது – பயன்பாடுஅற்றது மற்றும் இயற்கை – கலாசாரம் ஆகிய மேற்குறிப்பிட்ட முரண்நிலை சார்ந்த எண்ணக்கருக்களுக்கு இடையே வேறுபாடுகள் இல்லாமல் போய்விட்டது என போர்டிரியர் வாதிடுகின்றார்.

இவ் வகையில் ஊடக மெய்மையின் மூல உபாயங்கள் உண்மை இல்லாதவற்றை உண்மையாகக் காட்ட முற்படுவதன் மூலம் மனிதனை அதிதீவிர அந்நியமாதல் செயல்முறைக்கு உட்படுத்துகின்றது. பொதுவாக அசலின் (முசபைபையெட) மூலம் நகல் (உழில) அறியப்படும் என்பதுடன் அசல் முதலிலும் நகல் பின்பும் இருப்புடையதாகக் காணப்படும். ஆனால் பின் நவீன சமூகத்தில் ஊடக மெய்மையின் செயற்பாடுகள் மேற்குறிப்பிட்ட செயல்முறைக்கு எதிராக இருக்கின்றன. ஊடக மெய்மை உருவாக்கும் விம்பங்கள் (ஐயபநள) அசலை பின்பற்றுவதில்லை. அவை அசலிலிருந்து வேறுபட்டவையாக இருக்கின்றன. மேலும் அசலுக்கும்

நகலுக்குமிடையிலான வேறுபாட்டினை கண்டறிய முடியாமல் உள்ளது. ஆரம்ப காலத்தில் அசலுக்கும் நகலுக்குமிடையிலான வேறுபாடு மிகவும் தெளிவாக இருந்தது. என குறிப்பிடும் போர்டிரியர் கைத்தொழில் புரட்சிக் காலத்தில். அதிகளவில் நகல்கள் உருவாக்கப்பட்டன. ஆயினும் நகலுக்கும் அசலுக்குமிடையிலான வேறுபாட்டினை அடையாளம் காண முடிந்தது. பின்நவீன சமூகத்தில் இலத்திரனியல் ஊடகங்களின் செல்வாக்கு காரணமாக நகலுக்கும் (விம்பத்திற்கும்) அசலுக்கும் இடையிலான வேறுபாடு கேள்விக்குறியாக்கப்படுகின்றது எனக் குறிப்பிடும் போர்டிரியர் நகல் (விம்பம்) அசலுக்கு முன்பே இருப்புடையதாக இருப்பதுடன் அசலை நிர்ணயிக்கும் சக்தி வாய்ந்த ஒன்றாக மாறுகிறது என சுட்டிக்காட்டுகிறார். இலத்திரனியல் உலகில் ஒவ்வொன்றும் விம்பமாக மாறுகின்றது என குறிப்பிடும் போர்டிரியர், இவ்வுலகில் ஊடகமாக செயற்படும் தன்மை பற்றி பின்வருமாறு விபரிக்கிறார்.

> ‘‘எவ்வாறு நாம் நிஜத்தினை (அசலை) கண்டறிய முடியாமல் இருக்கின்றதோ அதே அளவிற்கு மாயையினையும் (நகல்) நாம் கண்டறிய முடியாமல் இருக்கின்றது. நிஜத்தினைக் கண்டறிதல் சாத்தியமில்லாததன் காரணமாக மாயையினையும் கண்டறிதல் சாத்தியமில்லாததாக உள்ளது. எல்லாமே இணையத்தளங்களில் (தகவல் தளங்கள் மற்றும் வலைத்தளங்கள்) தரவேற்றம் செய்யப்பட்ட தரவுகளாக மாறிவிட்டன.’’ (போர்டிரியர் 1994:21)

பின்நவீன சமூகத்தில் இலத்திரனியல் ஊடகங்கள் : தொலைக்காட்சி, திரைப்படம், இலத்திரனியல் இதழ்கள், விளம்பரங்கள், சமூக வலைத்தளங்கள், இன்னும் பல. செய்திகளை வழங்குகின்றன என்பதைக் காட்டிலும் அவை செய்திகளைப் பற்றி கொண்டுள்ள கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புகின்றன. இக் கருத்துக்கள் உண்மையானதா? அல்லது பொய்யானதா? என்பதைக் காட்டிலும் அவை மக்களின் ஆர்வத்தைத் தூண்ட வேண்டும் என்ற நோக்கே ஊடகங்களுக்குப் பின்னால் இருக்கும் ஊக்கியாகக் காணப்படுகின்றது. இலாப நோக்கத்திற்காக ஊடகங்கள் அதிக வாடிக்கையாளர்களை தம் வசம் கவர்ந்திழுக்கக் கூடிய செய்திகளை கதைகளாக உருவாக்குகின்றன. இத்தகைய சூழ்நிலையில் ஊடகங்கள் ஒரு மனிதனுக்கு எது சரி?, எது பிழை? ஆகிய கருத்துக்களை உருவாக்குவதன் காரணமாக அதி தீவிரமான அந்நியமாதல் சூழ்நிலைக்கு ஒரு மனிதன் ஆளாகின்றான். ஒரு சில மனிதர்கள் அல்லது ஒரு சில கம்பனிகளின் கோடிக்கணக்கான வருமானங்களுக்காக மொத்த சமூகத்தின் கருத்துக்களும் வாழ்க்கை முறைகளும் மாற்றியமைக்கப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் மாக்ஸ் வாழ்ந்த சமூகத்தைக் காட்டிலும் அதிகமாக தற்கால சமூகத்தில் அந்நியமாதல் காணப்படுவதாக போர்டிரியர் வாதிடுகின்றார். ஊடகங்கள் ஆதிக்கம் செய்யும் பின்நவீன சமூகத்தில் மனிதனுக்கு உண்மையான தேவை எது? என்ற நிலை மாறி அவனுக்காக வர்த்தக ரீதியான தேவைகள் செயற்கையாக உருவாக்கப்பட்டு அவன் மீது திணிக்கப்பட்டுள்ளது எனக் கருதும் போர்டிரியர், இத்தகைய வேலைகளை மிகவும் கச்சிதமாகவும் சிறப்பாகவும்

ஊடகங்கள் செய்து முடிக்கின்றன என குறிப்பிடுகின்றார். எடுத்துக்காட்டாக, தாகத்தைத் தணிக்கும் இளநீர் பல்வேறு பரிமாணங்களில் ஆரோக்கியத்திற்கு சிறப்பாக இருக்கும் பட்சத்தில் அதனை முக்கியத்துவப்படுத்தாமல் ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கும் இரசாயனங்களைக் கொண்ட குளிர்பானங்கள் இலத்திரனியல் ஊடகங்களில் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. இங்கு மனிதர்கள் நல்லதை விட்டுவிட்டு தீயதை தெரிவு செய்யும் சூழ்நிலை உருவாக்கப்படுகிறது. மேலும் இத்தகைய குளிர்பானங்களை அருந்துவது உயர்வானதாகவும் குறிப்பிட்ட சூழ்நிலையில் ஏற்புடையதாகவும் (நாகரிகமானதாகவும்) இளநீரைப் பருகுவது தாழ்வானதாகவும் (நாகரிகம் குறைந்த) என்ற நோக்கு உருவாக்கப்படுகிறது.

பின்நவீன சமூகம் ஒரு நுகர்வுச் சமூகமாக மாற்றப்பட்டதன் காரணமாக பொருட்கள் மற்றும் சேவைகளில் ஒரு பரிமாணம் வெளிப்படுத்தப்பட்டு ஏனைய பரிமாணங்கள் மறைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக தொலைக்காட்சியில் இடம்பெறும் ஒரு தேயிலை விளம்பரத்தில் அழகான வெள்ளைத்தோல் கொண்ட கணவனும் மனைவியும் தேனீர் சுவைக்கும் காட்சியும் பசுமையான தேயிலைத் தோட்ட பகுதிகளும் காண்பிக்கப்படும் அதே வேளை தேயிலையினை உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யாத நிலையில் சுரண்டலுக்கு உட்பட்டு வாழ்ந்து வருவர். பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலாளி பொருட்களில் இருந்து அந்நியப்படுத்தப்படுவதுடன் அவரது துன்பம், உழைப்பு என்பன முக்கியத்துவத்தினை இழக்கின்றன.

### 4.0 முடிவுரை (Conclusion)

மாக்ஸிய நோக்கிலிருந்து அந்நியமாதல் ˙செயல்முறை பல்வேறு பரிமாணங்களில் இடம்பெறுவதை சுட்டிக்காட்டும் போர்டிரியர் ஊடக மெய்மை அந்நியமாதல் செயன்முறையினை தீவிரப்படுத்துகிறது என வாதிடுகின்றார். ஊடக மெய்மை பற்றிய போர்டிரியரின் கருத்து ஓரளவுக்கு சரியானது என்று ஏற்றுக் கொள்ளலாமே தவிர முழுமையாக சரியானது என்று கூறமுடியாது. மனித இயல்பு பற்றி அவரது நோக்கு சரியானது என்று கூறமுடியாது மனிதனது தேவைகளும் ஆசைகளும் வரையறைக்குட்பட்டது அல்ல. மனிதன் எப்போதும் நிகழ்காலத்தில் வாழாமல் எதிர்கால கனவுகளிலும் கற்பனைகளிலும் வாழ்ந்து வருவதாக இருத்தலியல் வாதிகள் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது. (கொலிங்சன்,1987:159-160) ஒரு தனிமனிதன் நிறைவேற்ற முடியாத ஆசையினை நிறைவேற்றுவதில் ஊடகமெய்மையின் பங்களிப்பினை நாம் குறைத்து மதிப்பிட முடியாது மனிதனால் ஒரேவிதமான வாழ்க்கை முறையினை தொடர்ச்சியாக வாழ்ந்து வர முடியாது. அவனது வாழ்வில் புதுமையும் புதியதும் தேவைப்படுகிறது. மாக்ஸிசம் மனிதனை வரையறைக்குட்பட்ட பொருளாக நோக்குகிறது. இத்தகைய நோக்கிற்கு போர்டிரியர் முக்கியத்துவம் கொடுத்ததன் காரணமாக ஊடக மெய்மையின் ஒரு பகுதியினை அவர் பார்க்கத் தவறிவிட்டார் என்றே கூறலாம். ஆயினும் விலங்குகள் மற்றும் மனிதர்கள் பற்றிய அவரது ஒப்பீடு அவர் ஊடக மெய்மையின் இயல்பினை புரிந்து கொண்டுள்ளார்

என்பதை வெளிப்படுத்துகின்றது. மனிதனில் நிறைவேற்ற முடியாத ஆசைகள் ஆழ்மனதில் புதைக்கப்பட்டு கனவுகளாக வெளிப்படுகின்றன என்ற பிராய்டின் கருத்தினை உள்வாங்கிக் கொண்ட போர்டிரியார், இத்தகைய கனவுகளை நிஜமாக்கும் நோக்கில் ஊடகமெய்மை செயற்படுகிறது என்பதை அவர் ஏற்றுக் கொண்டிருந்தார். பின்வரும் அவரது கருத்துக்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

> "விலங்குகள் நனவிலி மனத்தை கொண்டிருப்பதில்லை ஆகையால் அவை ஒரு பிரதேச எல்லைக்குள் வாழ்கின்றன. மனிதன் மட்டும் நனவிலி மனதை கொண்டிருப்பதன் காரணமாக அவன் தன் பிரதேசத்தை இழந்து விட்டான். (அவன் பிரதேச எல்லையினை கடந்து செல்கிறான்) (போர்டிரியர்1994:135)

மக்களுக்கு நிஜம் எது?, போலி எது? என்ற வேறுபாட்டினை ஊடக மெய்மை இல்லாமல் செய்வதாக போர்டிரியர் குற்றம் சாட்டுகிறார். ஆனால் நடைமுறையில் உண்மை எது?, போலி எது? என மக்கள் தெரிந்தே உள்ளனர். ஒரு சில மனிதர்கள் ஊடக மெய்மையின் வெளிப்படுத்தல்களை உண்மை என நம்பி தமது வாழ்வினைக் கெடுத்துக் கொள்கின்றனர். பெரும்பான்மையான மக்கள் ஊடக மெய்மையின் தன்மையினை உணர்ந்து அதனுடன் பொருத்தமான இடைவினையினை பேணி வருகின்றனர்.

போர்டிரியர் கருதுவது போல் ஊடக மெய்மை என்பது முழுமையாக கற்பனை சார்ந்தது எனும் கருத்தினையும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. எடுத்துக்காட்டாக சில சமூக வலைத்தளங்கள் ஒரு நிகழ்வு பற்றி பல்வேறு கோணங்களிலிருந்து செய்தியினை வழங்கும் ஆற்றலுடையனவாக இருக்கின்றன. அதேவேளை அதிகாரத்தினை மையமாகக் கொண்ட அரச ஊடகங்கள் தமது வெளிப்படுத்தல்களில் அதிகளவு கட்டுப்பாட்டினைக் கொண்டு செயற்படுவதை நாம் கவனிக்க முடிகிறது. தற்போதைய இலத்திரனியல் யுகத்தில் அளவுக்கதிகமான சமூக வலைத்தளப் பாவனையானது மறைக்கப்பட்ட நிகழ்வுகளையும், கருத்துக்களையும் வெளிக்கொண்டு வரும் பணியினைச் செய்து வருகின்றன. போர்டிரியர் கூறுவது போல ஊடகம் உண்மையினை எப்போதும் மறைக்கும் என கூறமுடியாது. எடுத்துக்காட்டாக 2017 தை மாதம் தமிழ்நாட்டில் இடம்பெற்ற ஜல்லிக்கட்டு ஆதரவு போராட்டம் முழுமையாக அரச சார்பற்ற ஊடகங்கள் அல்லது சமூக வலைத்தளங்களின் செயல்பாடுகள் காரணமாகவே நடத்தப்பட்டது. உண்மையில் ஜல்லிக்கட்டு தொடர்பான சரியான தகவல்களை அரச ஊடகங்கள் மக்களுக்கு வழங்கியிருக்கவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. அரச சார்பற்ற ஊடகங்கள் ஜல்லிக்கட்டு தொடர்பான பல்வேறு உண்மைகளை மக்கள் மத்தியில் கொண்டு சேர்த்தது. இதன் காரணமாக இப்போராட்டம் வெற்றியடைந்தது. ஒன்றுக்கு மேற்பட்ட ஊடகங்கள் பல்வேறு கருத்துநிலைகளுடன் (னைநழடழபல) செயற்படுவதன் காரணமாக உண்மைகளை வெளிக்கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் அதிகமாகின்றன என்பதை நாம் மறுக்க முடியாது. போர்டிரியர் கூறுவது போல ஊடக மெய்மை ஒரு சில பாதக தன்மையினைக் கொண்டிருந்த போதிலும் ஆழமாக நாம் சிந்தித்துப்

பார்க்கும்போது அது உண்மையினை நோக்கி எம்மை அழைத்துச் செல்கின்றது என்பதை நாம் மறுக்க முடியாது. ஊடக மெய்மை சில விடயங்களில் மாயையினை நுகர்வோர் மத்தியில் உருவாக்கினாலும் அந்த மாயை உளவியல் ரீதியாக கட்டாயத் தேவையாகவுள்ளது. நீட்சே குறிப்பிடுவது போல் கலை பொய்யாக இருந்த போதிலும் அது தேவையாக உள்ளது.(பெரியோஸ் மற்றும் ரிட்லே,2001:77-78) இதே போல் ஊடக மெய்மை சில வேளைகளில் சில விடயங்களில் பொய்யானதாகவும், மாயையாகவும் தோன்றினாலும் கூட அதன் தேவை மனித பரிணாம உளவியல் செயன்முறையில் அவசியமான ஒன்றாக காணப்படுகின்றது என்பதை மிகவும் உயர்ந்த நோக்கிலிருந்து சிந்திக்கும் போது புரிந்து கொள்ளமுடியும்.

### 5.0 உதவி நூல் பட்டியல் (References)


Baudrillard, Jean (1994) Simulacra and Simulation, USA: The University of Michigan Press.

-------------------- (1995) the Mirror of Production, St.Louis: Telos Press

Baudrillard, Jean (1998) the Consumer Society: Myths and Structures, London, Sage Publication.

Berrios, Ruben and Ridley, Aaron (2001) Environmental Aesthetics in the Routledge Companion to Aesthetics edited by Berys Gaut and Dominic McIverLopes, London: Routledge,

Collinson, Diane (1987) Fifty Major Philosophers, A Reference Guide, London: Routledge

Kellner, Douglas (2015) Jean Baudrillard, The Stanford Encyclopedia of Philosophy (Winter 2015Edition) ,Edward N. Zalta (ed.) *[online]available:*https://plato.stanford.edu/archives/win2015/entries/baudrillard/ *(may 27.2019).*

Kellner,Douglas(1989) Jean Baudrillard, From Marxism to Post Modernism and Beyond , Cambridge: Polity Press.

Lechte, John (1994) Fifty Key Contemporary Thinkers, From Structuralism to Post Modernity, London: Routledge

Poster, Mark ed. (1968) The System of Objects, Jean Baudrillard Selected Writing [ online] available:www.humanities.uci.edu/m**poster**/.../**Baudrillard**,%20**Jean**%20-%20**Select.(** *may,27 2019)*

*Ramakrishnan, Sushmita(2017) Does Jalikattu really help the native breeds? [online] available :* http://www.newindianexpress.com/states/tamil-nadu/2017/jan/21/does-jallikattu-really-help-the-native-breeds-1561910--1.html( may,27, 2019